டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 27.11.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 134 | Madurai | Online Edition

யூரியா உற்பத்தியில் தன்னிறைவை நோக்கிய இந்தியாவின் முக்கிய நடவடிக்கை

6 புதிய ஆலைகளுக்கு அனுமதி

புது தில்லி, நவ.26

பிரதமர் நரேந்திர மோடியின் தற்சார்பு இந்தியா தொலைநோக்குப் பார்வையின்படி, விவசாயத் துறையின் மீள்திறனை வலுப்படுத்தவும், உரப் பாதுகாப்பை உறுதி செய்யவும், யூரியா உற்பத்தியில் தன்னிறைவை அடையவும் மத்திய அரசு ஒரு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது. 'யூரியாவுக்கான தேசிய முதலீட்டுக் கொள்கை-2026'-ன் கீழ், ஏற்கனவே உள்ள ஆலை வளாகங்களில் 6 புதிய யூரியா ஆலைகளை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சுமார் ரூ.54,000 கோடி முதலீட்டில் மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி, யூரியா உற்பத்தியில் தன்னிறைவு அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த ஆறு ஆலைகளில் சென்னை மெட்ராஸ் உரத் தொழிற்சாலையும் அடங்கும். அதிக உற்பத்திச் செலவு, எரிசக்தி நுகர்வு, பாதுகாப்பு அபாயங்களைக் கொண்ட 60 ஆண்டு களுக்கும் மேலான பொதுத்துறை நிறுவனத்தின் பழைய உற்பத்தி ஆலைக்குப் பதிலாக, ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய உற்பத்தி ஆலையை அமைக்கும் திட்டமாக இது அமைந்துள்ளது.



இளையான்குடி வட்டாரத்தில் கிசான் கோஷ்திஸ் மற்றும் வயல் விழா குறித்த விவசாயிகள் கூட்டம்

சிவகங்கை, நவ.26



சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் மூலமாக மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் 26.11.26 அன்று கிசான் கோஷ்திஸ் என்ற வயல் விழா நிகழ்ச்சி இளையான்குடி ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மைய அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இளையான்குடி வட்டாரத்திற்கு உட்பட்ட கிராமங்களில் இருந்து விவசாய பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் விவசாய பெருமக்கள் விளம்பர பாதகைகள் மூலம் வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றி பேரணி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்டம் உழவர் பயிற்சி மையம் வேளாண்மை துணை இயக்குநர் பி.செல்வம், தலைமை வகித்து நிகழ்ச்சியில், கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண்மை சார்ந்த திட்டங்களையும், மெத்தைலோ பாக்டீரியா திரவ நுண்ணுயிர் உரம் பயன்படுத்தி விதை நேர்த்தி, நாற்றுக்களின் வேர்களை நனைத்தல் இலைவழி தெளித்தல் (அனைத்து பயிர்களுக்கும்), இலைகளில் 1 சதவீதம் இருக்குமாறு தெளிக்க வேண்டும் (10 மி.லி/லிட்டர் தண்ணீர்) என்றும், அதன் பயன்கள் பற்றியும் மற்றும் நெற்பயிருக்கு மாற்றாக பயறு வகை மற்றும் எண்ணெய் வித்துகள் பயிர்களுக்கு ரூ.1750/- ஏக்கர் சாகுபடி செய்யவும், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் திட்டத்தின் கீழ் கேழ்வரகு 2.5 ஏக்கர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ரூ.4000/- ஹெக்டர் செய்யவும், தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் (மக்காச்சோளம், சிறுதானியம், கேழ்வரகு மற்றும் குதிரைவாலி) விதைகள், உயிர் உரங்கள் வாங்கி பயன்படுத்துவீர் என்றும் விளைநிலம் காப்போம், பயிர் காப்பீடு மற்றும் விவசாய நில உடைமைகளை பதிவேற்றம் செய்தல் போன்ற திட்டங்களை எடுத்து கூறினார்.

இளையான்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மு.தங்கபாண்டியன், வேளாண்மைத் துறையில் செயல்படுத்தி கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றியும், திட்டங்களின் பயன்பாடுகள்,

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் வேளாண்மைத்துறையின் மூலம் விநியோகிக்கப்படும் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டிரியா, திரவ பொட்டாஷ் இவைகளை பயன்படுத்தி அனைத்து பயிர்களுக்கும் விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்தும் மற்றும் பிரதமமந்தரி கௌரவ நிதி திட்டம் போன்ற திட்டங்களை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

வேளாண்மைத் துறை வேளாண்மை அலுவலர் நாகராசு இயற்கை வேளாண்மை மண் மாதிரி சேகரித்தல் மற்றும் மண் ஆய்வின்படி விவசாயிகள் உரமிடல் வேண்டும். மேலும் நெல் ரகங்கள் தேர்வு குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார்.

இப்பயிற்சியில் மதுரை முனைவர் ராஜேஷ், பயிர் சாகுபடி முறைகள், விதை தொழில்நுட்பம், பயிர் பாதுகாப்பு மற்றும் களை கட்டுபாடு, வேளாண் சூழலியல் மற்றும் பருவநிலை மாற்றம் போன்ற தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துக்கூறினார். இளையான்குடி உதவி தோட்டகலை அலுவலர் சரவணன், தோட்டக்கலை துறையில் உள்ள திட்டங் களான சொட்டு நீர் பாசனம் அமைத்தல், தேசிய தோட்டகலை இயக்கத்தின் மூலம் பழப்பயிர்கள் மற்றும் காய்கறிகள் பரப்பு விரிவாக்க திட்;டம், மாநில தோட்ட கலை அபிவிருத்தி திட்டம் மற்றும் பனை மேம்பாட்டு இயக்கம் பற்றியும் மற்றும் காய்கறி மற்றும் பழப்பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார்.

இளையான்குடி வட்டார கால்நடை உதவி மருத்துவர் மோகன வாசன் வரும் 23.11.26 முதல் 30 நாட்கள் வரை ஆட்டு கொல்லி நோய் தடுப்பூசி திட்டம், (TPR) ஆடுகளுக்கு தடுப்பூசி செலுத்த உள்ளது என்றும் மற்றும் ஆடு மாடுகளுக்கு நோய் பரவும் விதம் தடுப்பு முறைகளை எடுத்து கூறினார். மீன்வளத்துறை சார்பாக கலந்து கொண்ட உதவி ஆய்வாளர் முத்துகுமார், மீன்வளத் துறையில் செயல்படுத்தி வரும் திட்டங்களை பற்றி விரிவான முறையில் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கோகிலா அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சிகள் சம்பந்த மான உள் மற்றும் வெளிமாநில, மாவட்ட அளவிலான பட்டறிவு, கண்டுணர்வு பயிற்சிகள் செயல் விளக்கத்திடல்கள் அமைத்தல் தொடர்பாக திட்டங்களை பற்றி விவசாயிகளுக்கு விரிவான முறை யில் எடுத்துக் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சதிஸ் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

மக்காச்சோளம் மற்றும் சோளம் செயல்விளக்கத் திடல்கள் ஆய்வு



கோயம்புத்தூர், நவ.26 கோயம்புத்தூர் மாவட்டம், சுல்தான்பேட்டை வட்டாரத்திற்கு உட்பட்ட இடையார் பாளையம் வருவாய் கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பாக அமைக்கப் பட்டுள்ள பயிர் செயல் விளக்கத் திடல்களை, வட்டார வேளாண்மை அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP) மற்றும் தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து (NFSNM) திட்டத்தின் கீழ், சுல்தான் பேட்டை பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் தரமான மக்காச்சோளம் மற்றும் சோளம் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் விவசாயிகளின் வயல்களிலேயே நவீன சாகுபடி முறைகளைச் செய்து காட்டும் வகையில் இந்தச் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பயிர்களில் பூச்சி மற்றும் நோய் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், உர மேலாண்மை மற்றும் சொட்டு நீர்ப் பாசனம் மூலம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கினர். இந்த கள ஆய்வின் போது, விவசாயிகளுடன் சுல்தான்பேட்டை வட்டார வேளாண்மை அலுவலர்கள், தொழில்நுட்ப உதவியாளர் உடனிருந்தனர்.



பருப்பு வகைப் பயிர்களில் சிறந்த வேளாண் நடைமுறைகள் செயல்விளக்கமளித்த வேளாண்மை கல்லூரி மாணவிகள்



திருப்பூர், நவ.26

தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் வேளாண்மை விரிவாக்கப் பிரிவு சார்பில், கேத் பச்சாவோ அபியான் (Khet Bachao Abhiyan) திட்டத்தின் கீழ், திருப்பூர் மாவட்டம், ஆனைமலை வட்டாரம், ரமணமுதலிபுதூர் கிராமத்தில் 25.11.26 அன்று விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுமார் 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். பருப்பு வகைப் பயிர்களில் சிறந்த வேளாண் நடைமுறைகள் (Good Agricultural Practices in Pulses) குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இக்கூட்டம் ஆனைமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் விவேகானந்தன், ஓய்வு பெற்ற வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்ராஜ் சாமுவேல், வேளாண்மைப் பொறியியல் துறையைச் சேர்ந்த யுவராஜ் தட்சிணாமூர்த்தி மற்றும் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) அலுவலர் . அர்ஜுன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பருப்பு வகைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டன. கோடைக்கால உழவு (Summer Ploughing), மண்புழு உரத்தின் பயன்பாடு, நுண்ணூட்டக் கலவைகளின் முக்கியத்துவம், பசுந்தாள் உரப் பயிர்களின் பயன்பாடு மற்றும் மண் வள மேலாண்மை ஆகியவை விளக்கப்பட்டன. மேலும், ஏற்ற பயிர் ரகங்களைத் தேர்வு செய்தல், விதை நேர்த்தி மற்றும் பயிர் பாது காப்பு முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

பருப்பு வகைப் பயிர்களில் ஏற்படும் வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடி (Trichoderma viride) மூலம் விதை நேர்த்தி செய்வதன் அவசியம் மற்றும் உயிரியல் கட்டுப் பாட்டுக் காரணிகளின் பங்கு விளக்கப்பட்டது. மேலும், இமிடா குளோபிரிட் (Imidacloprid) பயன்பாடு, வறட்சியைத் தாங்கும் திறனை மேம்படுத்த 5 சதவீத பொட்டாசியம் குளோரைடு (KCl) கரைசலைத் தெளித்தல் மற்றும் பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்து மேலாண்மை குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

நவீன வேளாண் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை விளக்கும் வகையில், ஆளில்லா வானூர்தி (Drone Technology) மூலம் பயிர் களுக்குப் பூச்சிக்கொல்லி மற்றும் ஊட்டச்சத்துகளைத் தெளிப்பதன் பயன்கள், அதன் செயல்திறன் மற்றும் வேளாண்மையில் வளர்ந்து வரும் பயன்பாடுகள் குறித்தும் விளக்கப்பட்டது. நீர் மேலாண் மையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் சொட்டுநீர்ப் பாசனத்தின் (Drip Irrigation) பயன்கள், நீர் சிக்கனம், வடிகட்டிகளைத் தூய்மையாகப் பராமரித்தல், சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றுப் பம்புகளின் பயன்பாடு மற்றும் பாசன முறைகளில் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக, தென்னை சாகுபடியில் சொட்டுநீர்ப் பாசனத் தைப் பயன்படுத்து வதன் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக, பொள்ளாச்சி, மணக்கடவு வாண வராயர் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த பத்து இறுதியாண்டு வேளாண்மை மாணவிகள், தங்களது கிராமத் தங்கல் திட்டத்தின் (Grama Thangal Thittam) கீழ், பருப்பு வகைப் பயிர்களில் உயிரியல் நைட்ரஜன் நிலைநிறுத்தம் (Biological Nitrogen Fixation in Pulses) என்ற தலைப்பில் நேரடிச் செயல்விளக்கம் அளித்தனர்.

இச்செயல்விளக்கத்தில் உயிருள்ள மாதிரிகளைப் (Live Speci-mens) பயன்படுத்தி, பருப்பு வகைப் பயிர்களின் வேர்களில் உரு வாகும் வேர் முடிச்சுகள் (Root Nodules) மற்றும் அவற்றில் வாழும் ரைசோபியம் (Rhizobium) நுண்ணுயிரிகளின் செயல்பாடுகளை விவசாயிகளுக்கு நேரடியாகக் காண்பித்தனர். வளிமண்டலத்தில் உள்ள நைட்ரஜனைத் தாவரங்கள் பயன்படுத்தக்கூடிய வடிவத்திற்கு மாற்றுவதில் ரைசோபியம் நுண்ணுயிரிகள் எவ்வாறு செயல்படு கின்றன என்பதையும், இதன் மூலம் பயிர்களுக்குத் தேவையான நைட்ரஜன் கிடைப்பதுடன் மண் வளமும் மேம்படுவதையும் தெளி வாக விளக்கினர். மேலும், ரைசோபியம் உயிர் உரத்தைக் கொண்டு விதை நேர்த்தி செய்வதன் அவசியம், பருப்பு வகைப் பயிர்களில் உயிரியல் நைட்ரஜன் நிலைநிறுத்தத்தின் முக்கியத்துவம் மற்றும் நிலையான வேளாண்மையில் அதன் பங்களிப்பு குறித்தும் எடுத்துரைத்தனர்.



இக்கூட்டத்தின் மூலம் விவசாயிகள் நவீன வேளாண் தொழில் நுட்பங்கள், பாரம்பரிய சாகுபடி முறைகள், பயிர் பாதுகாப்பு, இயற்கை ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் நீர் மேலாண்மை குறித்த பல்வேறு பயனுள்ள தகவல்களைப் பெற்றனர். குறிப்பாக, வாணவராயர் வேளாண்மைக் கல்லூரி மாணவிகளின் நேரடிச் செயல்விளக்கம், அறிவியல் சார்ந்த வேளாண் முறைகளை விவசாயிகள் எளிதில் புரிந்து கொள்ள உதவியது. இந்நிகழ்வு பருப்பு வகைப் பயிர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதோடு, மண் வளத்தைப் பாதுகாத்து நிலையான வேளாண்மையை ஊக்கு விக்கும் வகையில் பயனுள்ளதாக அமைந்தது.



சம்பா பயிருக்கு காப்பீடு செய்ய கால அவகாசம் நீட்டிப்பு!

வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, நவ.26

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் நெல் சம்பா பயிருக்கு பயிர் காப்பீடு செய்வதற்கான கால அவகாசம் டிசம்பர் 1 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என வேளாண்மை உதவி இயக்குநர் தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கந்தர்வ கோட்டை வட்டாரத்தில் 2026-2027 ஆம் ஆண்டிற்கான ராபி சிறப்பு பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல் சம்பா பயிரானது எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் பொழுது விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கிட பயிர்க் காப்பீடு திட்டத்தின் கீழ் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா பயிருக்கு பயிர் காப்பீடு செய்வதற்கான கடைசி நாள் கடந்த 15ம் தேதியாக நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. ஆனால் கால நீட்டிப்பு செய்ய வேண்டி விவசாயிகள் கோரிக்கை அளித்ததைத் தொடர்ந்து மத்திய மற்றும் மாநில அரசுகள் அந்தக் கோரிக்கையிகை பரிசீலனை செய்து நெல் சம்பா பயிருக்கு பயிர் காப்பீடு செய்வதற்கான கால அவகாசத்தை டிசம்பர் 1ம் தேதி வரை நீட்டிப்பு செய்துள்ளது. நெல் சம்பா பயிருக் கான பிரீமியத் தொகை ஏக்கருக்கு ரூ.558.52 ஆகும். மாவட் டத்தில் இவ்வாண்டு பயிர்க் காப்பீடு திட்டத்தின் கீழ் அனைத்து கிரா மங்களிலும் நெல் சம்பா பயிரினை சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த காப்பீட்டுத் திட்டத்தில் இணையலாம். இத்திட்டத்தில் இணைய நடப்பில் உள்ள வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல்பக்க நகல், ஆதார் அட்டை நகல், சிட்டா மற்றும் நடப்பு பசலி அடங்கல் ஆகிய ஆவணங்களுடன் அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்கள் மூலமாக உரிய பிரீமியம் தொகை செலுத்தி மேற்குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பயிர்க்காப்பீடு செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் மத்திய அரசால் தற்பொழுது பயிர்க் காப்பீடு செய்திட விண்ணப்பிக்கும் பொழுது விவசாயிகளுக்கான தனிப்பட்ட அடையாள எண் பெறாத விவசாயிகள் அதற்கு விண்ணப்பித்து தனிப்பட்ட அடையாள எண் பெற்ற பிறகு பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயவேலன் தெரிவித்துள்ளார்.

சம்பா நேரடி நெற்பயிரில் ட்ரோன் மூலம் பிபிஎப்எம் தெளிப்பு விழிப்புணர்வு



கடலூர், நவ.26 கடலூர் மாவட்டம், குமாராட்சி வட்டாரத்தில்7750 எக்டர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. நெற்பயிர்கள் சுமார் 50-55 வயது உடைய வளர்ச்சி பருவத்தை எட்டியுள்ள நிலையில் தற்போது வடகிழக்கு பருவமழை மற்றும் வாய்க்கால் பாசனத்தில் போதிய நீர் வரத்து இன்மை காரணமாக நெல் வயலில் வறட்சியை தாங்கும் மற்றும் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு உயிர் உரமான மெத்திலோபாக்டீரியா, பிபிஎப்எம் ட்ரோன் வழி தெளிப்பு விழிப்புணர்வு செயல்விளக்கம் குமாராட்சி வட்டாரத்தில் உள்ள எடையூர் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டது.

விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், முனைவர் சத்திய நாராயணன் மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் தமிழ்வேல், ஆகியோர் விவசாயிகளிடம் வறட்சி காலங்களில் 15-20 நாட்கள் பயிர் வாடாமல் பாதுகாக்க மற்றும் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் உயிர் உரமான மெத்திலோ பாக்டீரியம் தெளிப்பு குறித்த விழிப்புணர்வு செய்தனர். எடையூர் கிராமத்தில் 2 ஏக்கர் நெல் வயலில் இலைவழிதெளிப்பாக 15% மெத்திலோபாக்டீரியம் ஒரு ஏக்கருக்கு ஒரு லிட்டர் மெத்திலோ பாக்டீரியம் 20 லிட்டர் நீரில் கரைத்து ட்ரோன் வழிதெளிப்பு மூலமாக அளிக்கலாம். 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் தெளிக்கலாம் அல்லது ஒரு ஏக்கருக்கு ஒரு லிட்டர் மெத்திலோ பாக்டீரியம் 100 லிட்டர் நீரில் கரைத்து காலை அல்லது மாலை நேரத்தில் இலைகள் நனையும் படி நெற்பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களில் அல்லது 30,45 நாட்களுக்கு ஒரு முறைகைத் தெளிப்பான்கள், பவர் ஸ்பிரேயர் மூலமும் தெளிக்கலாம் என பரிந்துரைக்கப்பட்டது.

விவசாய ட்ரோன் பயன்பாடு குறித்து மாணவர்களுக்கு இலவச பயிற்சி



தேனி, நவ.26

தேனி மாவட்டம், பெரிய குளத்தில் விவசாயப் பணிகளில் ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்து மாணவ, மாணவிகளுக்கு ஒரு நாள் இலவசப் பயிற்சி நடந்தது.

பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிரீன் ஸ்கை நிறுவனம் இணைந்து நவம்பர் 24ல் இப்பயிற்சியை நடத்தின. மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் நிர்மலா பயிற்சியை துவக்கி வைத்தார். இதில், ட்ரோன் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் தொழில் நுட்பம், அதன் பயன்பாடுகள், நவீன விவசாயத்தில் ட்ரோன் களின் பங்கு குறித்து பயிற்சியாளர் கோகுல் விளக்கினார். தொடர்ந்து, ட்ரோனை இயக்கி வயல்வெளிகளில் மருந்து தெளிப்பது குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் நிர்மலா பேசுகையில், நவீன தொழில்நுட்பங்களை விவசாயத்தில் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க முடியும். காளான் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு போன்ற மாற்றுத் தொழில்களிலும் மாணவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்றார்.

கல்லூரி முதல்வர் பேசுகையில், பயிற்சியில் கற்றுக்கொண்ட ட்ரோன் தொழில்நுட்பத்தை விவசாயிகளிடம் எடுத்துரைத்து, நவீன விவசாய வளர்ச்சிக்கு மாணவர்கள் உதவ வேண்டும் என வலியுறுத்தினார்.

தேனி, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சி ஏற்பாடுகளை வசந்தன் மற்றும் கல்லூரிப் பணி யாளர்கள் செய்திருந்தனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

பயிர்களில் சத்து குறைபாட்டை கண்டறிவது எப்படி?

பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் அதிக மகசூலுக்கும் 17 அத்தியாவாசிய ஊட்டசத்துகள் தேவைப்படுகின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்று குறைந்தால், பயிர்களின் இலைகள், தண்டுகள் மற்றும் வேர்களில் குறிப்பிட்ட அறி குறிகள் தென்படும். இலையின் நிறம் மற்றும் அறிகுறிகள் தென்படும் இடத்தை வைத்து சத்துகள் குறைபாடுகளை எளிதாக கண்டறியலாம்.



சத்துகள் குறைபாடுகளை பயிரில் கண்டறிவது எப்படி?

ஒவ்வொரு வகை பயிருக்கும், எதோ ஒரு சத்து அதிகளவு தேவைபடுவதால், உர பயன்பாடு விவசாயிகளுக்கு சவாலான வியமாக மாறி உள்ளது. ஒவ்வொரு வகை மண்ணிலும் சில சத்துகள் அதிகமாகவும், சில சத்துகள் குறைவாகவும் காணப் படும். இதில் எந்த சத்து குறைவாக உள்ளது என்று கண்டறிந்து உரமிடல் வேண்டும்.

எந்த எந்த பகுதியில் என்ன சத்துகளின் குறைபாடுகளை தெரிந்து கொள்ளலாம்?

1) முதிர்ந்த கீழ் இலைகளில் தோன்றும் குறைபாடுகள்

தழைசத்து, மணிசத்து, சாம்பல்சத்து மற்றும் மெக்னிசிய நுண்ணூட்ட சத்து.

மண்ணில் தழைசத்து (N) பற்றாக்குறை ஏற்படும் போது, பயிரின் முதிர்ந்த இலைகளில் உள்ள தழைசத்து இளம் இலை களுக்கு எளிதாக நகர்ந்து சென்று விடுகிறது. எனவே முழு வளர்ச்சி அடைந்த செடிகளில் ஒரே நேரத்தில் இளம் இலைகள் வெளிர் பழுப்பு நிறத்திலும், நடுப்பகுதி இலைகள் வெளிர் மஞ்சள்வெளிர் பழுப்பு நிறத்திற்கு மாறி விடும். சாம்பல் சத்து

குறைபாடு உள்ள பயிரில் இடைக்கணுக்கள் குட்டையாக குறுகி காணப்படுவதுடன் பசுமை இழுந்து விடும்.

2) இளம் (மேல்) இலைகளில் தோன்றும் குறைபாடுகள்

சுண்ணாம்பு சத்து, கந்தக சத்து, இரும்பு சத்து மற்றும் போரான் சத்து.

சுண்ணாம்பு சத்து குறைபாடு உள்ள பயிர் வளர்ச்சி குன்றி குட்டையாகவும் தடித்த தண்டுகளுடன் காணப்படும். கந்தக சத்து குறைபாடு இருந்தால் மஞ்சள்நிற மாக மாறும் மேல் இலைகளில் தோன்றும். இரும்பு சத்து குறைபாடு இருந்தால் இலைகள் வெளிறி காணப்படும். போரான்சத்துகள் குறை பாடுகளை பூக்கள் உதிர்வது, பிஞ்சுகள் உதிர்வதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

3) நடுத்தர மற்றும் இளம் இலைகளில் தோன்றும் நுண்ணூட்ட சத்து குறைபாடு?

துத்தநாகம், மாங்கனிஸ், தாமிரம் போன்ற நுண்ணூட்ட சத்துகள்

துத்தநாக சத்து பற்றாக்குறையாக இருந்தால் இரண்டு கணுக்களுக்கு இடைப்பட்ட தூரம் குறையும்.

மாங்கனிஸ் குறைபாட்டால் இலைகளில் மஞ்சள்நிற புள்ளி தோன்றி காய்ந்து பின் துளையாக மாறிவிடும்.

தாமிரசத்து குறைபாட்டால் இலைகளின் நுனி வாடி சுருண்டு விடும்.

மேலே கண்ட அறிகுறிகளை கொண்டு எவ்வகை சத்துகள் குறைவாக உள்ளது என்பதை மண்பரிசோதனை வாயிலாக கண்டறிந்து அதற்கேற்ப சமச்சீரான உரங்களை (அடியுரம், நுண்ணூட்ட கலவை, மேலுரம்) போன்றவற்றை இடுவதுடன் தேவைபடின் இலைவழி தெளிப்பும் மேற்கொள்ள வேண்டும். இயற்கை உரங்களை (தொழு உரம், ஆட்டுகிடை, உயிர் உரங்கள்) பயன்படுத்திட வேண்டும். மண்வளத்தை மேம்படுத் தினால் தான் உரசத்து பற்றாக்குறை பயிரில் ஏற்படாது அதற்கு சமச்சீர் உரம் பயன்படுத்திட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

பள்ளி மாணவர்களுக்கு வேளாண் தொழில்நுட்பக் கண்காட்சி!

திருநெல்வேலி, நவ.26

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமத்தில் உள்ள கீழச்சிவந்திபுரம் டி.டி.டி.ஏ. நடுநிலைப் பள்ளியில், வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் 24.11.26 அன்று பள்ளி மாணவர்களுக்கான வேளாண் தொழில்நுட்பக் கண்காட்சி நடைபெற்றது.



இக்கண்காட்சியின் முக்கிய நோக்கம் பள்ளி மாணவர் களிடையே வேளாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதுமாகும்.

இக்கண்காட்சியில் கிராமக் குடியிருப்பு அமைப்பு வரைபடம், பாலினக் கவர்ச்சிப் பொறிகள் (Sex Pheromone Traps), வாழையில் கன்றுகளை நடவு செய்வதற்குத் தயார்படுத்தும் பேரிங் மற்றும் பிரலினேஜ் முறைகள், காளான் வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, மண்புழு உர உற்பத்தி, வாழைப்பழ மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு, காண்டாமிருக வண்டு மேலாண்மை மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற பல்வேறு தலைப்புகளில் தயாரிக்கப்பட்ட விளக்கப்படங்கள் காட்சிப்படுத்தப் பட்டன.

மேலும், பயிர்களில் ஏற்படும் பல்வேறு நோய்கள், பூச்சித் தாக்குதல்கள் மற்றும் களைகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்த படும் வேளாண் மருந்துகள் மற்றும் இரசாயனப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டு, அவற்றின் பயன்பாடுகள் குறித்து பள்ளி மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மாணவர்கள் வேளாண்மையின் அடிப்படைகள், பயிர் பாதுக காப்பு முறைகள், கால்நடை வளர்ப்பு, இயற்கை உரத் தயாரிப்பு, காளான் வளர்ப்பு மற்றும் வேளாண் விளை பொருட்களை

மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றும் முறைகள் குறித்து ஆர்வத்துடன் அறிந்து கொண்டனர்.

இக்கண்காட்சியை ஒருங்கிணைத்து நடத்திய மாணவர்கள் ஹரிபிரணவ் ஸ்ரீ ப, ஹேமலதா கோ, ஹனியா வி, கீர்த்தனா இரா, கனகலெட்சுமி மு, கவி ஸ்ரீ பொ, ஜனனி இ, கயல்விழி, கோபிகா ர.கு, கோபிகா தினேஷ்.

பள்ளி மாணவர்களுக்கு வேளாண்மையின் சிறப்பையும், நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாட்டையும் அறிமுகப் படுத்தும் பயனுள்ள கல்வி நிகழ்வாக இக்கண்காட்சி அமைந்தது.



சிறந்த உயிர்ம விவசாயிகள் நம்மாழ்வார் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

செங்கல்பட்டு, நவ.26

உயிர்ம வேளாண்மை முறை இந்தியாவில் தொன்றுத்தொட்டு பின்பற்றப்பட்டு வரும் முறையாகும். உயிர்ம வேளாண்மை என்பது செயற்கை ரசாயன உரம், பூச்சிக்கொல்லி ஆகியவற்றை தவிர்த்து, இயற்கையுடன் இணைந்த உயிரியல் சுழற்சி, இயற்கை மற்றும் உயிர்ம எரு பயன்படுத்துதல் மூலம் பயிர் பாதுகாப்புமற்றும் பாயிர் சாகுபடி செய்யப்படுவதோடு மண்வளத்தையும் பாதுகாப்பதாகும். உயிர்ம வேளாண்மையில் மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் உயிர்மகழிவுகளை நன்றாக மக்கச்செய்து, அவற்றில் உள்ள ஊட்டசத்துக்களை மண்ணிற்கு அளிப்பதன் மூலம் அதை பயிர்கள் எடுத்துக் கொள்கின்றன.

உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் உழவர்களை ஊக்குவித்து அவர்களின் பங்களிப்பை மேலும் வலுப்படுத்துவதற்கும் உயிர்ம வேளாண்மையில் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ள முன்னோடி விவசாயிகளை கௌரவிப்பதற்கும் சிறந்த உயிர்ம உழவருக்கான நம்மாழ்வார் விருது வழங்கும் திட்டம் 2026-27ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், விவசாயிகள் பதிவேட்டில் (Farmer Registry) பதிவு செய்த விவசாயிகளாக இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் பரப்பில் உயிர்ம வேளாண் மையில் சாகுபடி செய்தல் வேண்டும். முழு நேர உயிர்ம விவசாயி-யாக இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் உயிர்ம வேளாண்மையில் ஈடுபட்டிருக்க வேண்டும். உயிர்ம வேளாண்மைக் கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். இத்திட்டத்தில் வெற்றி பெறும் 5 உயிர்ம விவசாயிகளுக்கு, தமிழ்நாடு அரசால் தலா ரூ.2 இலட்சம் ரொக்கப் பரிசு, சான்றிதழ் மற்றும் பதக்கத்துடன் சிறந்த உயிர்ம உழவருக்கான நம்மாழ்வார் விருது வழங்கப்படும்.

நம்மாழ்வார் விருது பெற விரும்பும் விவசாயிகள் அக்ரிஸ் நெட் வளைதளத்தில் 31.12.26-ம் தேதிக்குள் பதிவுக் கட்டணம் ரூ.100 செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். மேலும், இது தொடர்பான தகவலுக்கு அருகிலுள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத் தினை தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என செங்கல்பட்டு மாவட்ட, வேளாண்மை இணை இயக்குநர் எம்.ஸ்டீபன் ஜெயகுமார் தெரிவித்துள்ளார்.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.26

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 26.11.26 அன்று, காட்டுமன்னார்கோவில், குமாராட்சி மற்றும் கம்மாபுரம் வட்டாரத்தில் உள்ள வானமாதேவி, சிவாகம் மற்றும் ஊதாங்கால் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் சு ஜெய்வேலு, சத்திய நாராயணன் மற்றும் சிவசங்கர் ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக் களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டசத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத் தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்தியமாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில், குமாராட்சி மற்றும் கம்மாபுரம் வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

இப்கோ விவசாயிகள் கருத்தரங்கம்

மதுரை, நவ.26

மதுரை மாவட்டம், மந்திக்குளம் PACCS-இல் நடைபெற்ற விவசாயிகள் கருத்தரங்கில், இப்கோ கள அலுவலர் ஆனந்தன், சமச்சீர் உர மேலாண்மை மற்றும் இப்கோ நானோ உரங்களான நானோ டி.ஏ.பி., நானோ யூரியா, நானோ NPK, நானோ ஜிங்க், நானோ காப்பர், சாகரிகா மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தும் முறை மற்றும் நன்மைகளை குறித்து விளக்கமளித்தார்.

மேலும், சங்கட் ஹரன் பீமா யோஜனா, அரசின் நலத் திட்டங்கள், பயிர்க் காப்பீடு மற்றும் கூட்டுறவுக் கடன் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.



ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பழப்பயிர்களுக்கான செயல்விளக்க நிகழ்ச்சி!

விருதுநகர், நவ.26

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லி புத்தூர் வட்டம், மம்சாபுரம் கிராமத் தில், வாசுதேவநல்லூர் S.தங்கப் பழம் வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர் சாய்பிரியன்.G ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் (RAWE Programme) ஒரு பகுதியாக விவசாயி களுக்கான செயல்விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் கொய்யா சாகுபடியில் கிளைகளை வளைத்தல் மற்றும் திருகுதல் (Bending and Twisting in Guava) ஆகிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. இம்முறைகளின் மூலம் கிளைகளின் வளர்ச்சியைச் சீரமைத்து, பூக்கும் மற்றும் காய்க்கும் திறனை மேம்படுத்தி, அதிக மகசூல் பெறும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், வாழை சாகுபடியில் பாரிங் (Paring) மற்றும் பிராலினேஜ் (Pralinage) ஆகிய தொழில்நுட்பங்கள் செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டன. பாரிங் முறையில் வாழைக் கன்றுகளின் அழுகிய மற்றும் பாதிக்கப்பட்ட வேர்ப்பகுதிகளை அகற்றி ஆரோக்கியமான கன்றுகளைத் தேர்வு செய்வது குறித்தும், பிராலினேஜ் முறையில் வாழைக்கன்றுகளின் வேர் மற்றும் கிழங்குப் பகுதிகளை களிமண் கலவையால் பாதுகாப்பாகப் பூசி நடவு செய்வது குறித்தும் விளக்கப்பட்டது.

இத்தொழில்நுட்பங்களின் முக்கியத்துவம், செயல்முறைகள் மற்றும் அவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்து விவசாயி களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. இச்செயல்விளக்க நிகழ்ச்சி விவசாயிகளிடையே நவீன சாகுபடி முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

இனப் பெருக்கத்திற்காக ஆடுகளைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்

இனப்பெருக்கத்திற்கான ஆடுகளைக் கீழ்க்காணும் முறைகளில் தேர்வு செய்யலாம்.

1. தோற்றம்
2. மூதாதையரின் குணாதிசயங்கள்
3. சந்ததியரின் குணாதிசயங்கள்

I. தோற்றத்தின் அடிப்படையில் தேர்வு செய்தல்

1. இரண்டு பல் வயதுள்ள ஆடுகளைத் தேர்ந்தெடுப்பதே சிறந்ததாகும்.

2. ஆடுகளை வாரச்சந்தையில் வாங்குவதை விடச் சிறந்த பண்ணைகளிலிருந்து அல்லது நல்ல முறையில் வளர்த்து வரும் விவசாயிகளிடமிருந்து வாங்குவது நல்லது.

3. ஒரு ஈற்றில் 2 அல்லது 3 குட்டிகள் வரை போடும் ஆடுகளைத் தேர்ந்தெடுப்பது நல்லது.

4. மிருதுவான, பளபளப்பான தோல் கொண்ட ஆடுகளைத் தேர்வு செய்ய வேண்டும். இது ஆட்டின் உடல் நலத்தைக்காட்டும்.

5. சுறு சுறுப்புடன் அகன்ற பிரகாசமான கண்களை உடைய ஆடுகளைத் தேர்வு செய்யலாம்.

6. முதுகுப்புறமும், பின்பகுதியும் அகன்று விரிந்து இருக்கும் ஆடுகள் சிறந்தவை. அகன்ற முதுகுப்புறமும், விலா எலும்பும், அதிகத் தீவனத்தை எடுக்கும் தன்மையைக் காட்டும். அகன்ற பின்புறம் சிறந்த இனப்பெருக்கக் குணத்தைக் காட்டுவதாகும்.

7. ஈன்ற குட்டிகளைக்காக்கவும், நன்கு பால்கொடுக்கும் திறனுடையதாய்மை குணம் நிரம்பிய பெட்டை ஆடாக இருக்க வேண்டும். நன்கு திரண்ட, வளர்ச்சியடைந்த, மடியுள்ள ஆடுகளைத் தேர்வு செய்ய வேண்டும். மடியில் பாதிப்புள்ளதா என்பதை நன்கு ஆய்வு செய்து வாங்க வேண்டும்.

ஆடுகள் தேர்வு செய்யும் முறை

தேர்வு செய்யப்படும் கிடாக்கள் நன்கு ஆரோக்கியமானதாகவும், சுறுசுறுப்பு உடையதாகவும், பலமுள்ளதாகவும் வயதுக்குத் தகுந்த நல்ல வளர்ச்சி அடைந்ததாகவும், நல்ல எடை உடையதாகவும்



இருத்தல் வேண்டும். சிறந்த இனப்பெருக்கத்திறன் கொண்ட தாய்க்குப் பிறந்ததாக இருத்தல் நல்லது. கிடாக்கள் உயரமாகவும், உடல் நீளமாகவும், பருத்தும், நெஞ்சு அகன்றதாகவும், மார்பு எலும்புகள் விரிந்தும் இருக்க வேண்டும். கால்கள் உறுதியான தாகவும், நேராகவும் இருக்க வேண்டும். பொலி கிடாக்களுக்கு நல்ல சத்துள்ள சரிவிகித தீவனம் போதுமான அளவு கொடுத்து நன்கு பராமரிக்க வேண்டும்.

பெட்டை ஆடுகளைத் தேர்வு செய்யும் போது, நன்கு வளர்ச்சி யடைந்த ஆரோக்கியமான ஆடுகளைத் தேர்வு செய்ய வேண்டும். பெட்டைகள் சிறந்த இனவிருத்திப் பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். தலை குறுகியதாகவும், கழுத்து மெலிந்தும், உடல் நீளமானதாகவும், பருத்தும் அதிக தீவனம் உட்கொள்ளக் கூடிய திறன் உடையதாகவும் இருக்க வேண்டும். பால் கொடுக்கக் கூடிய பெட்டைகளின் மடி நன்கு பருத்தும், உடலோடு ஒட்டியும் இருக்க வேண்டும். மடி மிருதுவாகவும், பால் காம்புகள் கறந்தவுடன் சுருங்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அதிக இன விருத்தித் திறன் உடைய பெட்டைகளைத் தேர்வு செய்ய வேண்டும். தேர்வு செய்யப்படும் கிடாக்களில் நன்கு வளர்ச்சியடைந்த இரண்டு விரைகளும் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஒரு விரை உள்ள கிடாக்களை இனவிருத்திக்கு தேர்வு செய்யக்கூடாது.

ஆடுகளை தேர்ந்தெடுப்பதில் கவனத்தில் கொள்ள வேண்டியன

பிறப்பு எடை அதிகமாக இருந்த ஆடுகள்

இரட்டையாகப் பிறந்த பெட்டைக் குட்டிகள்

நோயால் பாதிக்கப்படாத ஆடுகள்

இரண்டு முதல் நான்கு நிரந்தரப் பற்கள் கொண்ட ஆடுகள் போன்றவற்றை தேர்ந்தெடுப்பது நல்லது.

தமிழ் நாட்டின் தட்பவெப்பநிலைக்குக் கன்னியாடு, கொடியாடு, தலைச்சேரி ஆடுகள் நன்கு வளரக் கூடிய இனங்களாகும்.

II. மூதாதையரின் குணாதிசயங்களின் அடிப்படையில் தேர்வு செய்தல்

மூதாதையரின் குணாதிசயங்களை, நிர்ணயித்து அல்லது பதிவேடுகளிலுள்ள உற்பத்தி குறித்த தகவல்களைச் சேகரித்து

அவற்றிற்குப் பிறந்த குட்டிகளின் குணங்களைத் தீர்மானித்துத் தேர்வு செய்வதாகும். இத்தாய், தந்தையரின் குணங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஒரு இனத்தின் தனிப்பட்ட குணங்களை நாம் நேரடியாக அறிய வாய்ப்பில்லாத போதும், அது முதிர்ச்சி அடைந்து தனது திறனை நேரடியாகக் காண்பிப்பதற்கு முன் தேர்வு செய்யப்படும் போதும் இம்முறையைப் பின்பற்றலாம்.

III. சந்ததியரின் குணாதிசயங்களின் அடிப்படையில் தேர்வு செய்தல்

இம்முறையில் சந்ததிகளின் உற்பத்திக் குணாதிசயங்களின் அடிப்படையில் தாய் / தந்தை வெள்ளாடுகள் தேர்வு செய்யப்படு கின்றன. ஒரு பாலினத்தின் குணாதிசயங்களைத் துல்லியமாக இம்முறையில் கணக்கிட முடியும். இதனால் உயர்ந்த குணாதிசயங் களைக் கொண்ட கிடாக்களை அடையாளம் கண்டு பண்ணையின் உற்பத்தித்திறனைப் பெருக்கலாம்.

தகவல் : ***முனைவர் அ.ஷீபா, முனைவர் பி.என்.ரிச்சர்டு ஜெகதீசன், முனைவர் தா.லூர்து ரீத்தா, மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம், புதுக்கோட்டை.***

விவசாயிகளுக்கு மீன் அமினோ அமிலம் தயாரிக்கும் முறையை செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்த வேளாண் மாணவர்கள்



திருச்சி, நவ.26

தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம், திருச்சியைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டமான RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ், மணச்சநல்லூர் பகுதியில் விவசாயிகளை நேரில் சந்தித்து மீன் அமினோ அமிலம் (Fish Amino Acid) தயாரிக்கும் முறை குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

இந்நிகழ்வில், மீன் அமினோ அமிலம் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள், தயாரிப்பு முறையின் படிநிலைகள் மற்றும் இயற்கை வேளாண்மையில் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், மாணவர்கள் விவசாயிகளுடன் இணைந்து மீன் அமினோ அமிலம் தயாரிக்கும் முறையை நடைமுறையாகச் செய்து காட்டினர். மீன் அமினோ அமிலத்தைப் பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் இயற்கை சார்ந்த ஊட்டச்சத்து உள்ளீடாகப் பயன்படுத்துவது, அதன் பயன்பாட்டு முறைகள் மற்றும் வேளாண் மையில் அதன் நன்மைகள் குறித்தும் விளக்க மளிக்கப்பட்டது.

இந்த செயல்விளக்க நிகழ்வு விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் இடுபொருட்களைத் தயாரித்து பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன், வேளாண் மாணவர்களின் கள அனுபவத்தையும் மேம்படுத்தியது.



பெருமங்கலம் கிராமத்தில் மீன் அமினோ அமிலம் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்த செயல்விளக்கம்!



திருவாரூர், நவ.26

நாகப்பட்டினம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் குடவாசல் வட்டாரத் தில் தங்கி, இன்று பெருமங்கலம் கிராம விவசாயிகளுக்கு மீன் அமினோ அமிலம் (Fish Amino Acl) தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

இப்பயிற்சியில், மீன் அமினோ அமிலத்தின் முக்கியத்துவம், பயிர் வளர்ச்சிக்கு அதன் நன்மைகள் மற்றும் இயற்கை விவசாயத்தில் அதன் பங்கு குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர். மேலும், பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும், பயிர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதிலும் இதன் பயன்பாடு குறித்தும் எடுத்துரைத்தனர்.

தொடர்ந்து, வயல்வெளியில் மீன் அமினோ அமிலத்தை எவ்வாறு பயன்படுத்துவது, சரியான அளவில் கலந்து தெளிக்கும் முறை மற்றும் பயிர்களில் பூச்சித் தாக்குதலைக் குறைப்பதற்கான ஒருங் கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் அதன் பங்கு குறித்தும் விளக்கினர். இதன் மூலம் இயற்கை இடுபொருட்களைப் பயன் படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய முறைகளைப் பின் பற்றுவது குறித்த விழிப்புணர்வை விவசாயிகளுக்கு ஏற்படுத்தினர்.

பூச்சிப்பொறிகள் பற்றிய விவரங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்



சிவகங்கை, நவ.26

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவிகள் ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சியின் ஒரு பகுதியாக திருப்புவனம் வட்டம்,

மழவராயணேந்தல் கிராமத்தில் விவசாயிகளுக்கு பூச்சிப்பொறிகள் பற்றிய விவரங்களை மோனிகா, முத்து லெட்சுமி, நர்மதா, நேத்ரா, நிகிதா, பாக்கியலட்சுமி, பாண்டிச்செல்வி, பூஜா, பவித்ரா, பிரதிபா, பிரியதர்ஷினி வழங்கினர்.

இயையிற்சியில் மஞ்சள் ஒட்டும் பொறி, நில ஒட்டும் பொறி, இனக்கவர்ச்சிப்பொறி, பழ ஈ பொறி, விளக்குப் பொறி, குழிப்பொறி மற்றும் எலிப்பொறி பயன்படுத்துவதினால் பூச்சியின் தாக்கம் மற்றும் எலியின் தாக்குதலை கட்டுப்படுத்துதல் மற்றும் அதன் முக்கியத்துவத்தை குறித்து கூறினர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்களது சந்தேகங்களைக் கேட்டு பயனுள்ள ஆலோசனைகளப் பெற்றனர்.

சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து பள்ளி மாணவிகளுக்கு விழிப்புணர்வு பேரணி!



மதுரை, நவ.26

மதுரை மாவட்டம், செக்கானூரணியில் உள்ள அரசு கள்ளர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இன்று (25.11.26) சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து மதுரை வேளாண்மை கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் விழிப்புணர்வு பேரணி நடத்தினர். இதில் பள்ளி மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இப்பேரணியின் மூலம் சிறுதானியங்களின் ஊட்டச்சத்து சிறப்புகள், விவசாயத்தில் அதன் முக்கியத்துவம் மற்றும் அன்றாட உணவில் சிறுதானியங்களைச் சேர்த்துக் கொள்வதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, சாமை, வரகு போன்ற சிறுதானியங்களில் புரதம், நார்ச்சத்து, இரும்புச்சத்து உள்ளிட்ட அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன என்பதையும் மாணவிகளுக்கு எடுத்துரைத்தனர். சிறுதானியங்கள் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு, குறைந்த நீர் வளத்தில் பயிரிடக்கூடிய பயிர்களாகவும், வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயிர்களாகவும் இருப்பதால் விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக உள்ளன என்பதை விளக்கினர். பாரம்பரிய உணவு முறைகளைப் பாதுகாத்து, ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்க சிறுதானியங்களை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு செய்தியுடன் பேரணி நிறைவடைந்தது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741